# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1713/16 - 2011 ජූලි 07 වැනි බ්‍රහස්පතින්දා - 2011.07.07

*1713/16 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு யூலை மாதம் 07 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**வடமேல் மாகாண மாகாண சபை**

**வடமேல் மாகாணத்தின் மாகாண சபையின் 2011 ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க மாகாண சபையின் சுற்றாடல் (திருத்த) கொள்கைப் பிரகடனம்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வடமேல் மாகாணத்தின் மாகாண சபையினால் 2011.05.19 ஆந் திகதி நிறைவேற்றப்பட்டு, 2011.06.22 ஆந் திகதி வடமேல் மாகாண ஆளுநரால் அனுமதியளிக்கப்பட்ட மேற்படி கொள்கைப் பிரகடனத்தை அனைவரும் அறிந்து கொள்வதற்காக இங்கு கீழே பிரசுரிக்கின்றேன்.*

*பத்மினி காரியவசம்,*
*செயலாளர்,*
*வடமேல் மாகாண மாகாண சபை.*

*மாகாண சபை அலுவலகம்,*
*வடமேல் மாகாண மாகாண சபை,*
*குருநாகல்,*
*2011.06.27.*

**1990ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வடமேல் மாகாண மாகாண சபையின் சூழல் நியதிச்சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு நியதிச்சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வடமேல் மாகாண மாகாண சபையினால் சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயர்.*

1. இந்நியதிச்சட்டம் 2011ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க, வடமேல் மாகாண சூழல் (திருத்த) நியதிச்சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*1990ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க நியதிச் சட்டத்தின் 1ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

2. இதனகத்துப்பின்னர் "முதன்மை நியதிச்சட்டம்" எனக் குறிப்பீடு செய்யப்படும் 1990ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வடமேல் மாகாண சூழல் நியதிச்சட்டத்தின் முதலாம் பிரிவு இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

"நடை முறைக்கு வரும் தேதி.

1. இந்நியதிச்சட்டம் 1990ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வடமேல் மாகாண சூழல் நியதிச்சட்டம் என அழைக்கப்பட்டு குறிப்பீடு செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், அமைச்சரால் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் நியமிக்கப்படும் தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.".

*முதன்மை நியதிச் சட்டத்தின் 3ஆம் பிரிவைத் திருத்துதல்.*

3. முதன்மை நியதிச்சட்டத்தின் 3ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (உ) என்னும் பந்தி இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தி இடப்படுகின்றது:-

"(உ) மாகாண அதிகாரசபையின் தவிசாளர், அதிகாரசபையின் அப்போதைய பணிப்பாளரை அத்தகைய அதிகாரசபையின் செயலாளராக நியமித்தல் வேண்டும்.".

*முதன்மை நியதிச் சட்டத்தின் 11 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

4. முதன்மை நியதிச்சட்டத்தின் 11ஆம் பிரிவு இத்தால் நீக்கச் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

"பிரதான நிறை வேற்று அதிகாரி.

11. (1) பிரிவு 3இன் (1)ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியின்கீழ் நியமிக்கப்படும் தவிசாளர் மாகாண அதிகாரசபையின் பிரதான நிறைவேற்று அதிகாரியாக இருத்தல் வேண்டுமென்பதுடன் பணிப்பாளர் அதிகாரசபையின் பிரதான நிர்வாக அலுவலராகவிருத்தலும் வேண்டும்.

(2) (அ) தவிசாளரின் பொதுவான பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைவாக மாகாண அதிகாரசபையின் பணிப்பாளர், அதிகாரசபையின் நிருவாகத்திற்குப் பொறுப்பாகவிருத்தல் வேண்டுமென்பதுடன், அதன் தத்துவங்களைப் பிரயோகித்து கடமைகளை நிறைவேற்றி அதிகாரசபையின் ஊழியர்களின் நிருவாகத்திற்கும் கட்டுப்பாட்டிற்கும் பொறுப்பாதலும் வேண்டும்.

(ஆ) மாகாண அதிகாரசபை, சூழல் என்னும் விடயத்தில் தகைமைகளையுடைய வரும் சூழல் செயற்பாடுகளில் விசேட அறிவையுடையவருமான ஒருவரை நியதிச்சட்டத்தின் 12ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய மாகாண அதிகாரசபையின் பணிப்பாளராக நியமித்தல் வேண்டும்.

(இ) அவர் இந்நியதிச்சட்டத்தின் 12ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின்கீழ் மாகாண அதிகாரசபையால் விதித்துரைக்கப்பட்டவாறாக உகந்த ஊதியமளிக்கப் படுதல் வேண்டும்.

(ஈ) மாகாண அதிகாரசபையின் பணிப்பாளர், அதிகாரசபையின் கூட்டங்களில் பங்குபற்றுவதற்கு உரித்துடையவராவார். ஆனால் அத்தகைய கூட்டங்களில் தனது வாக்கையளிக்க உரித்துடையவரல்ல."

*முதன்மை நியதிச் சட்டத்தின் 17ஆம், 18ஆம் பிரிவுகளை நீக்கம் செய்தல்.*

5. முதன்மை நியதிச்சட்டத்தின் 17ஆம், 18ஆம் பிரிவுகள் இத்தால் நீக்கஞ்செய்யப்படுகின்றன.

*முதன்மை நியதிச் சட்டத்தின் 20ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

6. முதன்மை நியதிச்சட்டத்தின் 20ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

"விதித் துரைக் கப்பட்ட செயற் பாடுகள்

20. (1) சூழல் என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் சூழலுக்குள் கழிவை வெளியேற்றுதலில், படியவைத்தலில், வெளிவிடுதலில் தீழ்ப்பை ஏற்படுத்துகின்ற அல்லது இரைச்சலை ஏற்படுத்துகின்ற எச்செயற்பாடுகள் தொடர்பில் இந்நியதிச்சட்டத்தின்கீழ் உரிமமொன்று பெறப்படவேண்டுமோ (இதனகத்துப்பின்னர் "விதித்துரைக்கப் பட்ட செயற்பாடுகள்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அச் செயற்பாடுகளைத் தீர்மானிக்கலாம்.

(2) ஆள் எவரும்-

(அ) மாகாண அதிகாரசபையினால் வழங்கப்பட்ட உரிமமொன்றின் அதிகாரத்தின்கீழன்றி; அத்துடன்

(ஆ) இந்நியதிச்சட்டத்தின்கீழ் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியமங்களுக்கும் வேறு கட்டளைகளுக்கும் இணங்கவன்றி,

ஏதேனும் விதித்துரைக்கப்பட்ட செயற்பாடுகளைக் கொண்டு நடாத்துதலாகாது.

(3) இப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவுக்கு முரணாக ஏதேனும் விதித்துரைக் கப்பட்ட செயற்பாட்டினைக் கொண்டுநடாத்துகின்ற ஆள் ஒவ்வொருவரும்

தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக் கப்பட்டதன்மேல்-

(அ) பத்தாயிரம் ரூபாவுக்குக் குறையாத குற்றப்பணமொன்றிற்கு அல்லது ஒரு வருடத்துக்குக் குறையாத காலப்பகுதியொன்றுக்கான மறியற்றண் டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்; அத்துடன்

(ஆ) நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப் பகுதிக்குள் (2)ஆம் உட்பிரிவின்கீழான உரிமமொன்றைப் பெறுமாறு தேவைப்படுத்தப்படுதலும் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவின்கீழ் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆளெவரும் அவ் வுட்பிரிவின்கீழ் நீதி மன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட காலத்தினுள் உரிமமொன்றைப் பெறாமல் அச்செயற்பாட்டினை தொடர்ந்தும் கொண்டு நடாத்துகின்றவிடத்து, நீதிமன்றமானது, அத்தகைய ஆள் தேவைப்படுத்தப் பட்ட உரிமமொன்றைப் பெற்று அவ்வாறு பெறப்பட்ட உரிமத்தின் பிரதியொன்றை நீதிமன்றத்தின்முன் சமர்ப்பிக்கும்வரை அத்தகைய விதித்துரைக்கப்பட்ட செயற்பாடானது கொண்டுநடாத்தப்பட்ட தொழிற் சாலையை அல்லது வளவுகளை மூடிவிடுமாறு கட்டளையிடுதல் வேண்டும்.

முதன்மை நியதிச் சட்டத்தின் 24ஆம் பிரிவைத் திருத் துதல்.

7. முதன்மை நியதிச்சட்டத்தின் 24ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தி, அப்பந்தியில் ''ஐந்து நாட்கள்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''முப்பது நாட்கள்'' என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப் படுகின்றது.

முதன்மை நியதிச் சட்டத்தின் 62ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

8. முதன்மை நியதிச்சட்டத்தின் 62ஆம் பிரிவு நீக்கஞ்செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

'பொருள்கோடல் 62. இந்நியதிச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய-

''காற்றுத் தீம்ப்பு என்பது, தாவரங்களை, மிருகங்களை, மனிதர்களை, உயிரற்ற பொருட்களை பயங்கரமாகப் பாதிப்பதாக காற்றின் பௌதீக, இரசாயன, உயிரியல் பண்புகளில் ஏற்படும் விரும்பத்தகாத ஒரு மாற்றம் என்பதுடன், இயல்பான உட்சுவாசிக்கும் வெளிவிடும் முறையைக் குழப்பும் விரும்பத்தகாத மணம் அல்லது புகை அல்லது காற்று எனவும் பொருள்படும்;

''கட்டிடம்'' என்பது, ஏதேனும் வீடு தொழிற்சாலை, சுவர், ஏதேனும் விபரணத்திலாலான வேறு ஏதேனும் நிர்மாணம் எனப் பொருள்படும்;

''நிர்மாணம்'' என்பது, ஏதேனும் வேலி, தடை, வாயில், சட்டம், சுவர் அல்லது ஏதேனும் கட்டிடம் எனப் பொருள்படும்;

''சூழல்'' என்பது, நிலம், நீர், வாயு மண்டலம், காலநிலை, இரைச்சல், நாற்றம், சுவை என்பவற்றையும் மற்றும் ஒவ்வொரு விவரணத்திலுமான மிருகங்களினதும் தாவரங்களினதும் வேறு எல்லா பௌதீகக் காரணிகளையும் உள்ளடக்கிய மனித வர்க்கத்தின் சுற்றாடல்களின் பௌதீகவியல் காரணிகளாகும் எனப் பொருள்படும்;

''காணி'' என்பது, காணி மனைகளையும், கட்டிடங்களையும், அவற்றைச் சேர்ந்துள்ள எல்லா செல்வழியுரிமைகளையும் அத்துடன் ஏதேனும் அரச காணியையும் உள்ளடக்கும்;

''உள்ளூரதிகாரசபை'' என்பது, ஏதேனும் மாநகரசபை, நகரசபை, பிரதேசசபை, கிராமோதய சபை அல்லது அதன்பொருட்டு தாபிக்கப்படும் ஏதேனும் சபை அல்லது நிறுவகம் எனப் பொருள்படும்;

"விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர்" என்பது, சூழல் என்னும் விடயத்துக்குப் பொறுப்பான மாகாணசபை அமைச்சர் எனப் பொருள்படும்;

"இரைச்சல் தீழ்ப்பு" என்பது, சினமூட்டுதலை, சோர்வை, கேட்கும் ஆற்றல் இழத்தலை ஏற்படுத்துவதான அல்லது ஏனைய சத்தங்களின் புலனுணர்வுச் சக்தியுடனும் கவனத்தைத் திருப்புவதன்மூலமான பேச்சு ஒப்பளிப்பு முயற்சியுடனும் தலையிடுவதான ஒரு மட்டத்தில் சத்தம் இருத்தல் எனப் பொருள்படும்;

"தீழ்ப்பு" என்பது, ஏதேனும் நலமார்ந்த பயன்பாட்டைப் பங்கமான முறையில் பாதிக்கும் வகையில் பொதுமக்களின் சுகாதாரத்துக்கு, பாதுகாப்புக்கு அல்லது சேமநலத்துக்கு, அல்லது ஒவ்வொரு விவரணத்தினவுமான விலங்குகளுக்கு, பறவைகளுக்கு, வன விலங்குகளுக்கு, நீர்வாழ் உயிரினங்களுக்கு அல்லது தாவரங்களுக்கு தீங்கானதாகவுள்ள ஒரு நிலைமையை அல்லது தீங்குவிளைவிக்கக்கூடிய ஆற்றலுடையதாக உள்ள ஒரு நிலைமையை உருவாக்கும் வகையில் கழிவுகளை வெளியேற்றுவதன்மூலம், வெளிவிடுவதன்மூலம், அல்லது படியவிடுவதன்மூலம் சூழலின் ஏதேனும் பகுதியின் பௌதீக கூறினை, வெப்பநிலைக் கூறினை, இரசாயனக் கூறினை, உயிரினவியற் கூறினை அல்லது கதிர் இயக்கக்கூறினை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ மாற்றுதல் எனப் பொருள்படும்;

"ஆள்புல நீர்ப்பரப்பு" என்பது, வடமேல் மாகாணத்தினுள் உள்ள எல்லா நீர்த்தேக்கங்கள், ஆறுகள், ஏரிகள், கால்வாய்கள், அருவிகள் உள்ளிட்ட வடமேல் மாகாணத்தின் எல்லைகளினுள் உள்ள கடற்கரைகளும் கடலோர எல்லையும் எனப் பொருள்படும்;

"நச்சுத்தன்மையான இரசாயனப்பொருள்" என்பது, உயிர்வாழும் பொருட்கள் மீது தீமை பயக்கும் விளைவுகளைக் கொண்டிருக்கும் அல்லது சூழலில் இடையூறான மாற்றங்களை உண்டாக்கக்கூடிய ஏதேனும் திண்ம, திரவ அல்லது வாயு பதார்த்தம் எனப் பொருள்படும்;

"கழிவு" என்பது, சுத்திகரிக்கப்படாத மலம் கலந்தவை, விலங்கு மற்றும் தாவர கழிவு, கைத்தொழில் மற்றும் கமத்தொழில் நச்சுப்பொருட்கள், கரியமில வாயு அத்துடன் கைத்தொழில் மற்றும் வியாபார நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும் சாமான்களின் இடிபாடுகள் அத்துடன் பொதுச் சுகாதாரம் மற்றும் சூழல் என்பவற்றுக்கு ஊறு விளைவிக்கக்கூடியதும், விரும்பத்தகாத பொருட்களை உடையனவும் விரும்பத்தகாத மணம் உடையனவுமான காற்று, வாயு அல்லது புகை எனப் பொருள்படும்;

"செயலாளர்" என்பது, மாகாண சூழல் அதிகாரசபையின் செயலாளர் எனப் பொருள்படும்.'

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல்.

9. இந் நியதிச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

7 - 538

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.